**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.18/2026**

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருண் | Father's Name | : | சுரேஷ் |
| Village | : | நத்தம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 21 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of March 2026.**

**(Accused present)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தத்தில் வசித்து வருகிறேன். கும்பகோணம் அரசு கல்லூரியில் 3 ம் ஆண்டு பயின்று வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வீரையன் என் தாத்தா. 28.04.2024 அன்று என் தாத்தாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. அது எப்படி ஏற்பட்டது என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ-1** ஆகும். ஆய்வாளர் என்னை

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.24 10:43:29 +0530

விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 28.04.2024 அன்று என் தாத்தா வீரையன் வயலுக்கு நாத்து பறிக்க சென்றிருந்ததாகவும், மதியம் 12.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்த எங்கள் தெருவை சேர்ந்த மருதமுத்து என் வீட்டிற்கு வந்து வீரையன் தான் தன் ஆட்டை அடித்து கொன்றதாகவும், அவனை வெட்டிக்கொள்ளாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார் என்றும், நான் என் தாத்தாவை பார்க்க மதியம் 2.00 மணியளவில் அவர் வேலை செய்து கொண்டிருந்த வயலுக்கு சென்று பார்த்த போது எதிரி மருதமுத்து என் தாத்தாவை பார்த்து குச்சிக்காரி மவனே என் ஆட்டை அடித்து கொன்றுவிட்டு இங்க என்னடா வேலை பாக்குற என கையில் வைத்திருந்த அருவாளால் என் தாத்தாவை கழுத்தில், தலையில், முகத்தில் மாறி மாறி இத்தோடு தொலைந்து போடா என சொல்லி கொலை செய்யும் நோக்கத்துடன் வெட்டினார் என்றும், நாங்களும், மற்றவர்களும் தாத்தாவை தூக்க முயற்சித்தபோது மருதமுத்து தன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:43:35 +0530

கையில் வைத்திருந்த அருவாளை காட்டி கிட்டக்க வந்தா எல்லாருக்கும் இதே கெதி தான் என மிரட்டிவிட்டு ஓடி விட்டதாகவும், காயம்பட்ட தாத்தா வீரையனை 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தாம் என்றும், அங்கு தாத்தா மயக்கமாக இருந்ததால் நான் புகார் வாக்குமூலம் வலங்கைமான் போலீசாரிடம் கொடுத்தேன் என்றும் சொல்லிவிட்டு எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:43:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.18/2026

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name : | சுரேஷ் | Father's Name : | வீரையன் |
| Village : | நத்தம் | Taluk : | வலங்கைமான் |
| Calling : | | Age : | 41 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of March 2026.**

**(Accused present)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். காயம்பட்ட வீரையன் என் அப்பா. அ.,சா..1 என் மகன். என் அப்பா வீரையனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:43:45 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 28.04.2024 அன்று என் அப்பா வீரையன் வயலுக்கு நாத்து பறிக்க சென்றிருந்ததாகவும், மதியம் 12.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்த எங்கள் தெருவை சேர்ந்த மருதமுத்து என் வீட்டிற்கு வந்து என் அப்பா வீரையன் தான் தன் ஆட்டை அடித்து கொன்றதாகவும், அவனை வெட்டிக்கொள்ளாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார் என்றும், அ.சா.1 என் மகன் என் அப்பாவை பார்க்க மதியம் 2.00 மணியளவில் அவர் வேலை செய்து கொண்டிருந்த வயலுக்கு சென்று பார்த்த போது எதிரி மருதமுத்து என் அப்பாவை பார்த்து குச்சிக்காரி மவனே என் ஆட்டை அடித்து கொன்றுவிட்டு இங்க என்னடா வேலை பாக்குற என கையில் வைத்திருந்த அருவாளால் என் அப்பாவை கழுத்தில், தலையில், முகத்தில் மாறி மாறி இத்தோடு தொலைந்து போடா என சொல்லி கொலை செய்யும் நோக்கத்துடன் வெட்டினார் என்றும், அ.சா.1ம் மற்றவர்களும் அப்பாவை தூக்க முயற்சித்தபோது மருதமுத்து தன் கையில் வைத்திருந்த அருவாளை காட்டி கிட்டக்க வந்தா எல்லாருக்கும் இதே கெதி தான் என மிரட்டிவிட்டு ஓடி விட்டதாகவும் கேள்விப்பட்டேன் என்றும், காயம்பட்ட என் அப்பா வீரையனை 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:43:50 +0530

மருத்துவமனையில் சேர்த்தாம் என்றும், அங்கு என் அப்பா மயக்கமாக இருந்ததால் என் மகன் அருண் புகார் வாக்குமூலம் வலங்கைமான் போலீசாரிடம் கொடுத்தார் என்றும் சொல்லிவிட்டு எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:43:55 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.18/2026

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுதா | Husband Name | : | சுரேஷ் |
| Village | : | நத்தம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of March 2026.**

**(Accused present)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். காயம்பட்ட வீரையன் என் மாமனார். அ.,சா..1 என் மகன். என் மாமனார் வீரையனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:44:04 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 28.04.2024 அன்று என் மாமனார் வீரையன் வயலுக்கு நாத்து பறிக்க சென்றிருந்ததாகவும், மதியம் 12.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்த எங்கள் தெருவை சேர்ந்த மருதமுத்து என் வீட்டிற்கு வந்து என் மாமனார் வீரையன் தான் தன் ஆட்டை அடித்து கொன்றதாகவும், அவனை வெட்டிக்கொள்ளாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார் என்றும், அ.சா.1 என் மகன் என் மாமனாரை பார்க்க மதியம் 2.00 மணியளவில் அவர் வேலை செய்து கொண்டிருந்த வயலுக்கு சென்று பார்த்த போது எதிரி மருதமுத்து என் மாமனாரை பார்த்து குச்சிக்காரி மவனே என் ஆட்டை அடித்து கொன்றுவிட்டு இங்க என்னடா வேலை பாக்குற என கையில் வைத்திருந்த அருவாளால் என் மாமனாரை கழுத்தில், தலையில், முகத்தில் மாறி மாறி இத்தோடு தொலைந்து போடா என சொல்லி கொலை செய்யும் நோக்கத்துடன் வெட்டினார் என்றும், அ.சா.1ம் மற்றவர்களும் மாமனாரை தூக்க முயற்சித்தபோது மருதமுத்து தன் கையில் வைத்திருந்த அருவாளை காட்டி கிட்டக்க வந்தா எல்லாருக்கும் இதே கெதி தான் என மிரட்டிவிட்டு ஓடி விட்டதாகவும் கேள்விப்பட்டேன் என்றும், காயம்பட்ட என் மாமனார் வீரையனை 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.24 10:44:08 +0530

அரசு மருத்துவமனையில் சேர்த்தாம் என்றும், அங்கு என் மாமனார் மயக்கமாக இருந்ததால் என் மகன் அருண் புகார் வாக்குமூலம் வலங்கைமான் போலீசாரிடம் கொடுத்தார் என்றும் சொல்லிவிட்டு எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:44:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE**

**TIRUVARUR**

**Sessions Case No.18/2026**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருளானந்தம் | Father's Name | : | செந்தாமரை |
| Village | : | ரெகுநாதபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 39 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of March 2026.**

**(Accused present)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தத்தில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியும். காயம்பட்ட வீரையனை தெரியும். 28.04.2024 அன்று மதியம் 02.00 மணியளவில் வலங்கைமான் போலீசார் வீரையனை வெட்டிய இடமான வேளார் வயலை பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் தயார் செய்தனர் என்றும், அதில் 1ம் சாட்சியாக ஜெகதீஸ்வரனும், 2 ம் சாட்சியாக நானும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:44:17 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் பெற்றுக்கொண்டார்கள். நானும் ஜெகதீஸ்வரனும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டோம். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் படித்தும் காட்டவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:44:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.